## சுருக்கம்

கல்லூரிக் கல்வித் துறை – 2008–2009 ம் ஆண்டு பகுதி II திட்டம் – 25 அரசு கலைக் கல்லூரிகளில் ஒலி, ஒளி வசதிகளைக் கொண்ட உபகரணங்கள் மூலம் கற்பிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்த ரூ.50.00 இலட்சம் (தொடரா செலவினம்) அனுமதித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி.1)துறை

அரசு ஆணை (நிலை) எண். 232

ஆனி– 2.
திருவள்ளுவர்
ஆண்டு 2039,
நாள்: 16.5.2008.
படிக்கப்பட்டது:

அரசாணை நிலை எண்.136, உயர்கல்வி நாள் 29.5.2007.

---

ஆணை:

கல்லூரிகளில் கல்வி கற்பிக்கும் முறை வாய்மொழி மூலமாக மட்டுமின்றி அதன் தொடர்பான சாராம்சங்களை ஒலி,ஒளி வசதிகளைக் கொண்ட உபகரணங்கள் மூலம் கற்பிப்பது சிறந்த முறை எனக் கல்வி வல்லுநர்களால் கருதப்பட்டு, அம்முறையை, 10 அரசு கலைக் கல்லூரிகளில் செயல்படுத்த ஒலி, ஒளி வசதிகளைக் கொண்ட உபகரணங்கள் மூலம் வகுப்பறைகளில் கல்வி கற்பிப்பதற்கு தேவையான திரை, எல்.சி.டி புரொஜெக்டர் மற்றும் ஒலிப்பெருக்கி கருவிகள் வாங்க ரூ.15.00 லட்சம் 2007–2008 பகுதி II திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு செய்து மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. இதனை தொடர்ந்து கீழ்குறிப்பிட்டுள்ள 25 அரசு கலைக் கல்லூரிகளில் ஒலி,ஒளி வசதிகளைக் கொண்ட உபகரணங்களை பொருத்த ரூ.50.00 லட்சம் 2008–2009 ம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

| வ.எண் | கல்லூரியின் பெயர் | |
|---|---|---|
| 01. | அரியலூர் 624 713 | அரசு கலைக் கல்லூரி |
| 02. | பர்கூர் | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்) |
| 03. | செங்கல்பட்டு 603 001 | இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக் கல்லூரி |
| 04. | சென்னை 600 002. | காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி, |
| 05. | சென்னை 600 035 | அரசு ஆடவர் கலைக் கல்லூரி , |
| 06. | செய்யாறு | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, |
| 07. | சிதம்பரம் | அரசு கலைக் கல்லூரி |
| 08. | கோயபுத்தூர் 641 018. | அரசு கலைக் கல்லூரி, |
| 09. | காரைக்குடி. 623 003. | அழகப்பா அரசு கலைக் கல்லூரி, |
| 10. | கிருஷ்ணகிரி 635 001. | அரசு கலைக் கல்லூரி |
| 11. | மதுரை 625 002. | அருள் மிகு மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி |
| 12. | மேலூர் 625 106. | அரசு கலைக் கல்லூரி, |
| 13. | நாமக்கல் 637 002. | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, |

| | | |
|---|---|---|
| 14. | பொன்னேரி 601 204 | லோகநாத நாராயணசாமி அரசினர் கலைக் கல்லூரி, |
| 15. | புதுக்கோட்டை 622 003. | அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, |
| 16. | இராமநாதபுரம் | சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி , |
| 17. | சேலம் - 7. | அரசு கலைக் கல்லூரி |
| 18. | திருவண்ணாமலை | அரசு கலைக் கல்லூரி |
| 19. | திருநெல்வேலி | இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, |
| 20. | தஞ்சாவூர் 613007 | குந்தவை நாச்சியார், அரசு மகளிர் கலைக் கல்லூரி |
| 21. | திருத்தணி | அருள்மிகு சுப்ரமணியசாமி அரசு கலைக் கல்லூரி |
| 22. | திருச்சி -23. | பெரியார் ஈ.வெ.ரா கலைக் கல்லூரி |
| 23. | வேலூர் 632 002 | முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி |
| 24. | விருத்தாசலம் | திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, |
| 25. | வாலாஜாபேட்டை | அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி |

**3.** கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை ஏற்று மேற்குறிப்பிட்ட **25** அரசு கலைக்கல்லூரிகளில் ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒலி, ஒளி வசதிகளை கொண்ட உபகரணங்கள் மற்றும் இருக்கைகள் / தளவாடங்கள் வாங்க தொடரா செலவினமாக ரூ.**50.00** லட்சம் (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) **2008–2009** ஆண்டு பகுதி – **II** திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

**4.** மேலே பத்தி **3** ல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "**2002** பொதுக்கல்வி **03** பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும்**103**அரசுக் கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–**II** மாநிலத் திட்டம் – JA அரசு கல்லூரிகளில் (ஆடவர் அல்லது மகளிர்) பட்டப்படிப்பு தொடங்குதல் – வளர்ச்சிப் பணிகள் **24.** பொருள்களும் வழங்கலும் (து.தொ.கு. **2202 03 103 JA 2402**)"

**5.** இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.**25248**/கல்விI/08 நாள் **4.6.2008**ல் வழங்கப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

க.கணேசன்,

அரசு செயலாளர்.

பெறுநர்
கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை–**6.**
மாநில கணக்காயர்,சென்னை – **9/18.**
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை – **35/5 .**
நிதி(கல்வி–**1**) துறை.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.